**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.287/2017 |
| Deposition of witness | | PW3/LW5 |
| Name | | திரு.செல்வராஜ் |
| Father's/Husband Name | | ரெங்கநாதன் |
| Village | | பாவஜிக்கோட்டை, மதுக்கூர் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 55/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28th day of March 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பட்டுக்கோட்டை தாலுக்கா பாவாஜிகோட்டையில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1ஐ தெரியும். அ.சா.1செந்தில் (எ)செந்தில்குமாரி எனது ஊரைச்சேர்ந்தவர் அவருடைய தந்தையார் பெயர் வேதரத்தினம் வேதரத்தினத்திற்கு நான்கு மகள் அதில் செந்தில்குமாரி 3வது மகள். செந்தில்குமாரி படித்து முடித்துவிட்டு சிங்கப்பூரில் வேலைப்பார்த்து வந்தார். எதாவது ஊரில் விசேசத்திற்கு வந்து செல்வார். 2011 ம் ஆண்டு அ.சா.1 செந்தில் (எ) செந்தில்குமாரி ஊருக்கு வந்தபோது 1வது எதிரி பாலமுருகன் செந்தில் (எ) செந்தில்குமாரி வீட்டிற்கு வந்து அவருக்கு பொட்டு வைத்து திருமணம் செய்ததாக நம்பவ வைத்து அவருடன் பலமுறை உடலுறவு கொண்டு கணவன் மனைவி போல் வாழ்ந்து வந்துவிட்டு தற்போது 1வது எதிரி பாலமுருகன் இன்னோரு பெண்ணை திருமணம் செய்ய போவதாகவும் வந்து

பஞ்சாயத்து கேட்குமாறும் என்னுடன் வேங்கடேசன், பக்கிரிசாமி, சிவமணி 2016 ம் ஆண்டு மாதம் ஞாபகமில்லை ஆனால் முதல் வாராத்தில் அ.சா.1செந்தில் (எ) செந்தில்குமாரி அவரது அம்மா எதிரிகளிடம் பஞ்சாயத்து கேட்க சொல்லி கேட்டார்கள். நாங்கள் அனைவரும் அ.சா.1 யும் அவரது அம்மாவையும் மற்றும் பஞ்சாயத்தார்கள் நாங்கள் அழைத்துக்கொண்டு 1வது எதிரியை காண அறந்தாங்கி தாலுக்கா தீயத்தூர் கிராமத்திற்கு சென்றோம். அப்போது அங்கு எதிரி பாலமுருகன் ராசு, அடைக்கலம், மணி மற்றும் சுந்தரம் ஆகியோருடன் 1வது எதிரியை அ.சா.1 க்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்டபோது அவர்கள் 5 லட்சம் பணம், 20 பவுன் நகை மற்றும் ஒரு கார் சீதனமாக கொடுத்தால்தான் திருமணம் செய்வோம் என்று சொன்னார். நாங்கள் எவ்வளவோ பேசி பார்த்தோம் வரதட்சணை கொடுத்தால் திருமணம் செய்வோம் என்று சொன்னார்கள். நாங்கள் ஊருக்கு வந்துவிட்டோம். பின்பு எதிரிகள் அனைவரும் ஒரு வாராம் கழித்து எங்கள் ஊரானா பாவாஜிகோட்டைக்கு வந்து அ.சா.1யும் அவரது அம்மாவையும் மிரட்டினார்கள். ஒதுங்கிக்கொள்ளுங்கள் இல்லை எனில் வீட்டையெல்லாம் அடித்து நொருக்குவோம் என்று சொன்னார்கள். உடனே நாங்கள் பஞ்சாயத்து பேசி அனுப்பிவைத்தோம். இது சம்மந்தமாக அ.சா.1செந்தில் (எ) செந்தில்குமாரி பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எனைன விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-க.சத்யா

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.287/2017 |
| Deposition of witness | | PW4/LW6 |
| Name | | **திரு.சிவமணி** |
| Father's/Husband Name | | **ராஜேந்திரன்** |
| Village | | **பாவஜிக்கோட்டை, மதுக்கூர்** |
| Taluk | | **பட்டுக்கோட்டை** |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 48/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28th day of March 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பட்டுக்கோட்டை தாலுக்கா பாவாஜிகோட்டையில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1ஐ தெரியும். அ.சா.1 செந்தில் (எ) செந்தில்குமாரி எனது ஊரைச்சேர்ந்தவர் அவருடைய தந்தையார் பெயர் வேதரத்தினம் வேதரத்தினத்திற்கு நான்கு மகள் அதில் செந்தில்குமாரி 3வது மகள். செந்தில்குமாரி படித்து முடித்துவிட்டு சிங்கப்பூரில் வேலைப்பார்த்து வந்தார். எதாவது ஊரில் விசேசத்திற்கு வந்து செல்வார். 2011 ம் ஆண்டு அ.சா.1 செந்தில் (எ) செந்தில்குமாரி ஊருக்கு வந்தபோது 1வது எதிரி பாலமுருகன் செந்தில் (எ) செந்தில்குமாரி வீட்டிற்கு வந்து அவருக்கு பொட்டு வைத்து திருமணம் செய்ததாக நம்பவ வைத்து அவருடன் பலமுறை உடலுறவு கொண்டு கணவன் மனைவி போல் வாழ்ந்து வந்துவிட்டு தற்போது 1வது எதிரி

பாலமுருகன் இன்னோரு பெண்ணை திருமணம் செய்ய போவதாகவும் வந்து பஞ்சாயத்து கேட்குமாறும் என்னுடன் வேங்கடேசன், பக்கிரிசாமி, செல்வராஜ் 2016 ம் ஆண்டு 10வது மாதம், முதல் வாராத்தில் அ.சா.1செந்தில் (எ) செந்தில்குமாரி அவரது அம்மா சௌந்திரம் எதிரிகளிடம் பஞ்சாயத்து கேட்க சொல்லி கேட்டார்கள். நாங்கள் அனைவரும் அ.சா.1 யும் அவரது அம்மா சௌந்திரம் மற்றும் பஞ்சாயத்தார்கள் நாங்கள் அழைத்துக்கொண்டு 1வது எதிரியை காண அறந்தாங்கி தாலுக்கா தீயத்துார் கிராமத்திற்கு சென்றோம். அப்போது அங்கு எதிரி பாலமுருகன் ராசு, அடைக்கலம், மணி மற்றும் சுந்தரம் ஆகியோருடன் 1வது எதிரியை அ.சா.1 க்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்டபோது அவர்கள் 5 லட்சம் பணம், 20 பவுன் நகை மற்றும் ஒரு கார் சீதனமாக கொடுத்தால்தான் திருமணம் செய்வோம் என்று சொன்னார். நாங்கள் எவ்வளவோ பேசி பார்த்தோம் வரதட்சணை கொடுத்தால் திருமணம் செய்வோம் என்று சொன்னார்கள். நாங்கள் ஊருக்கு வரும் வழியில் 1வது எதிரிக்கு திருமணம் செய்ய போகும் பெண் சரண்யாவையும் அவரது அம்மாவையும் பார்த்தோம். 1வது எதிரி தேவடியா குச்சிக்காரி மகளே என திட்டினார்கள். நாங்கள் ஊருக்கு வந்துவிட்டோம். பின்பு எதிரிகள் அனைவரும் 12.10.2016 அன்று காலை 9 முதல் 10 மணிக்குள் எங்கள் ஊரானா பாவாஜிகோட்டைக்கு வந்து அ.சா.1யும் அவரது அம்மாவையும் மிரட்டினார்கள். ஒதுங்கிக்கொள்ளுங்கள் இல்லை எனில் வீட்டையெல்லாம் அடித்து நொருக்குவோம் என்று சொன்னார்கள். உடனே நாங்கள் பஞ்சாயத்து பேசி அனுப்பிவைத்தோம். இது சம்மந்தமாக அ.சா.1செந்தில் (எ) செந்தில்குமாரி பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எனைன விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-க.சத்யா

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.287/2017 |
| Deposition of witness | | PW5/LW8 |
| Name | | திரு.வினோத்குமார் |
| Father's/Husband Name | | மாரிமுத்து |
| Village | | பாவஜிக்கோட்டை, மதுக்கூர் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 30/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28th day of March 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**2,4,6,7 வது எதிரிகள் ஆஜரில் இல்லை. 1,3,5 எதிரிகள் ஆஜர் எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பட்டுக்கோட்டை தாலுக்கா பாவாஜிகோட்டையில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1ஐ தெரியும். அ.சா.1 செந்தில் (எ) செந்தில்குமாரி எனது ஊரைச்சேர்ந்தவர். 27.10.2016 அன்று பகல் 11.00 மணியளவில் பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலை போலிசார் அ.சா.1செந்தில் (எ) செந்தில்குமாரி வீடான பாவாஜிக்கோட்டை மெயின் ரோடு வந்து அ.சா.1 செந்தில் (எ) செந்தில்குமாரியை 1வது எதிரி பாலமுருகன் திருமணம் செய்வதாக ஏமாற்றியது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்ததாக சொல்லி சம்பவ இடத்தை

பார்வையிட்டு படம் வரைந்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அதில் சாட்சியாக நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த ராஜ்குமாரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து **அ.சாஆ**-2 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எனைன விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-க.சத்யா

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.